# அரசியல் அதிகாரத்தின் ஊடாக முஸ்லிம்களின் கல்வி, பொருளாதாரம், அரசியல் எழுச்சியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகர் மர்ஹூம் அஷ்ரப் அவர்களின் பங்களிப்பு.

Musahira.A.L[1], Zilfa.M.N.F[2] & Farisa.M.A.F[3]

[1,2&3] Faculty of Islamic Studies & Arabic Language, South Eastern University of Sri Lanka

musaahiraadam@gmail.com

**ஆய்வுச் சுருக்கம் :** ஓர் சமூகத்தின் முன்னேற்றம் கல்வி, பொருளாதாரம், அரசியல் போன்ற முக்கிய விடயங்களில் தங்கியுள்ளது. அந்தவகையில் இவ் ஆய்வானது, "அரசியல் அதிகாரத்தினூடாக முஸ்லிம் சமூக கல்வி, பொருளாதார, அரசியல் எழுச்சியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகர் மர்ஹூம் அஷ்ரபின் பங்களிப்பு" என்ற தலைப்பில் அமையப்பெற்றுள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ரப் அவர்கள் சமூகத்திற்கு ஆற்றிய சேவையைப் பற்றியே இவ் ஆய்வு காணப்படுகின்றது. பண்புரீதியிலான ஆய்வு முறையிலமைந்த மேற்படி ஆய்வுக்கான தரவுகள் புத்தகங்கள், இணையத்தளம் மூலம் பெறப்பட்டுள்ளது. எம்.எச்.எம் அஷ்ரப் அவர்கள் சமூகத்திற்கு ஆற்றிய பங்களிப்புகளை மட்டுமன்றி அரசியல், பொருளாதார பங்களிப்புகளையும் வழங்கியுள்ளார் என்பதை மேற்படி ஆய்வின் முடிவில் அறிந்து கொள்ளலாம். இவ்வாய்வானது முஸ்லிம்கள் நாட்டிற்கு எவ்வாறான சேவையை ஆற்றியுள்ளனர் என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொள்வோருக்கு உறுதுணையாக அமையலாம்.

**கலை சொற்கள் :** அஷ்ரப், கல்வி, பொருளாதாரம், அரசியல், ஸ்ரீலங்கா, காங்கிரஸ்

## அறிமுகம்

காலணியத்துவத்திற்கு பிந்தியதான இலங்கை முஸ்லிம் அரசியல் தலைமைகளின் தொடர்ச்சியும் அவர்களின் பணியும், பங்களிப்பும் பல்தன்மைவாய்ந்தது. டீ.பி ஜாயா, டொக்டர் கலீல், சேர் ராஸிக் பரீத், ஏ.எம்.ஏ அஸீஸ், பதியுதீன் மஹ்மூத், ஏ.சீ.எஸ் ஹமீட், எம்.எச்.எம் அஷ்ரப் என்பவர்கள் இதில் குறிப்பிடத்தக்கவர்கள். ஒவ்வொருவரும் தாம் ஆற்றிய பணிக்காக வரலாற்றில் நினைவு கூறப்படுகின்றனர். இத்தலைமைகள் விமர்ச்சிக்கப்படுவதுடன் போற்றவும்படுகின்றனர். இவர்களுள் முஸ்லிம் சமூகத்திற்காக தனித்துவமான அரசியல் இயக்கமொன்றை வழி நடாத்தி அதனை இலங்கை அரசியல் வரலாற்றில் மாபெரும் மக்கள் இயக்கமாக மாற்றியவர் என்ற வகையில் மர்ஹூம் அஷ்ரப், மேல் குறிப்பிட்ட தலைவர்களுடன் ஒப்பிடும் போதும் மிக முக்கியமானவராகவும் அதேவேளை அதீத ஆளுமை நிரம்பியவராகவும் இருந்தார்.

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை எனும் ஊரில் உசைன் விதானை, மதீனா உம்மா ஆகியோருக்கு 1948 அக்டோபர் 23 இல் அஷ்ரப் எனும் ஆளுமை பிறந்தார்.

இவருக்கு மூன்று சகோதரிகள். கல்முனைகுடியில் வாழ்ந்து வந்த அஷ்ரப் தனது ஆரம்ப கல்வியை கல்முனைக்குடி அல்- அஷ்கர் வித்தியாலயத்திலும் இடைநிலைக்கல்வியை கல்முனை பாத்திமா கல்லூரியிலும், கல்முனை வெஸ்லி கல்லூரியிலும் தொடர்ந்தார். வழக்கறிஞ்சராக பணியாற்றிய அஷ்ரப் , பேரியல் இஸ்மாயில் அவர்களை காதலித்து திருமணம் செய்தார்.

இவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் முஸ்லிம்களின் சார்பிலான தலைமை அரசியல்வாதியும் ஆவார். கவிஞர், எழுத்தாளர், சட்டத்தரணி எனப் பன்முக ஆளுமை கொண்ட இவர் நான் எனும் நீ- கவிதை நூலின் சொந்தக்காரர். இலங்கை பாராளுமன்றத்தின் அங்கத்தவராகவும், துறைமுகங்கள், மற்றும் கப்பல் துறைமுக அபிவிருத்தி அமைச்சராகவும் இருந்த அஷ்ரப் ஒலுவில் துறைமுகத்தின் உருவாக்குதலுக்கு ஆரம்பவிதையிட்ட தலைவராவார்.

இலங்கை அரசியலில் மர்ஹூம் அஷ்ரபைப் போன்ற ஒருவரை இற்றைவரை பெறமுடியாமைக்கு அவரின் ஆளுமையையே பறைசாட்ட வேண்டும். முஸ்லிம் சமூகத்திற்கான ஸ்தாபகத் தலைவரின் பங்பளிப்பானது உரிமை, அபிவிருத்தி, அரசியல் பிரதிநிதித்துவம் என பல்துறைசார்ந்ததாகவே காணப்பட்டது.

அஷ்ரபின் கல்விப் பங்களிப்பை இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகமும் பொருளாதார பங்களிப்பை ஒலுவில் துறைமுகமும் பறைசாட்டுகின்றது. இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் பாரிய பங்களிப்பை மேற்கொண்ட தலைவரே மர்ஹூம் அஷ்ரப். இவ் ஆய்வானது மர்ஹூம் அஷ்ரபின் அரசியல், கல்வி, பொருளாதார பங்களிப்பை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

**ஆய்வு பிரச்சினை**

இலங்கை நாட்டின் வளரச்சி மற்றும் அபிவிருத்தியில் முஸ்லிம் சமூகங்களின் பங்களிப்பு மிக குறைவாகவே உள்ளது என்றும் இந்த நாட்டிற்கு விரோதமான செயற்பாடுகளை மேற்கொள்கின்ற ஓர் சமூகம் என்றும் இந்நாட்டு மக்களால் விமர்சிக்கப்படுகின்ற ஒரு கருத்தாக காணப்படுகின்றது. இவற்றை ஆய்வு பிரச்சினையாக கொண்டு முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் அரசியல் கல்வி, பொருளாதார ரீதியாக பல பணிகளை மேற்கொண்டவர்களில் ஒருவராக கருதப்படும் கலாநிதி மர்ஹூம் அஷ்ரப் அவர்களின் கல்வி, பொருளாதாரம் மற்றும் அரசியல் சேவைகளை விபரிக்க இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு நோக்கம்**

1- இலங்கையில் முஸ்லிம்கள் மத்தியில் கல்வி மற்றும் பொருளாதாரம், அரசியல் என்பவற்றில் பணியாற்றியவர்களில் ஒருவரான கலாநிதி மர்ஹூம் அஷ்ரப் அவர்கள் இந்நாட்டிற்கு ஆற்றிய சேவைகளை வரலாற்று ரீதியாக விபரித்தல்.

2- அரசியலில் ஆட்சியை அமைப்பதில் அஷ்ரபின் பங்களிப்பினை அடையாளப்படுத்துதல்.


ISBN 978-624-5736-14-0

**ஆய்வு முறையியல் :**

அரசியல் அதிகாரத்தின் ஊடாக முஸ்லிம் சமூகத்தின் கல்வி, பொருளாதாரம், அரசியல் எழுச்சியில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்ரஸின் ஸ்தாபகர் மர்ஹூம் அஷ்ரபின் பங்களிப்பு எனும் ஆய்வானது பண்பு ரீதியான ஆய்வாக காணப்படுகின்றது. மேலும் ஆய்வுக்காக தரவுகள் சேகரிப்பதற்கு இரண்டாம் நிலை தரவுகளும் பயன்படுத்தப்பட்டன. நூல்கள், பத்திரிகைகள்,ஆயவுக் கட்டுரைகள், கட்டுரைகள், இணையத்தளங்கள் என்பவற்றிலிருந்து தகவல்கள் திரட்டப்பட்டு தரவுகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

**ஆய்வின் முக்கியத்துவம் :**

"அரசியல் என்பது அனைத்து உயிர்களுக்குமான தேவையும் அதை நிறைவு செய்யும் சேவையும் தான்" (சீமான்) என்ற கூற்றுக்கினங்க அரசியல் மூலம் அனைத்து உயிர்களினதும் குறிப்பாக முஸ்லிம் சமூகத்தின் கல்வி பொருளாதாரம் அரசியல் எழுச்சியில் கைகொடுத்த கலாநிதி மர்ஹூம் அஷ்ரபின் பங்களிப்பை ஆய்வு செய்வதன் மூலம் தற்போதைய முஸ்லிம் அரசியல் அதிகாரிகளின் தேவைப்பாட்டை உணர்த்துதலே இவ்வாய்வின் முக்கியத்துவமாகும்.

**இலக்கிய மீளாய்வு**

- றவுப் ஸெய்ன், (2016) சமகால இலங்கை முஸ்லிம்கள் என்ற நூலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தோற்றம் மற்றும் கலாநிதி மர்ஹூம் அஷ்ரபின் அரசியல் செயற்பாடுகளை பற்றியும் குறிப்பிட்டுள்ளது. இந்த நூலிருந்து ஆய்வின் தேவைக்கேற்ப பயன்படுத்தப்பட்டுள்ளது.
- எம்.எம் பாயிஸ்/ எம்.ஏ.எம் பௌசர், (2015) "ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்தின் பொருப்பும் கட்சி மறுசீரமைப்பும்" Retrived from: [https://fazilmm.blogspot.com/2015/05/responsibility-of-slmc-leadership-and.html?m=1](https://fazilmm.blogspot.com/2015/05/responsibility-of-slmc-leadership-and.html?m=1) என்ற ஆய்வுக்கட்டுரை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தற்போதைய நிலைமையும் கலாநிதி அஷ்ரபின் முஸ்லிம் காங்கிரஸிற்கான பங்களிப்புக்கள் மற்றும் மர்ஹூம் அஷ்ரபின் கல்வி பொருளாதார சேவைகள் என்பவற்றை ஒப்பிட்டு அமைந்த கட்டுரையாகும். ஆய்வின் தேவைக்கேற்ப இக் கட்டுரை பயன்படுத்தப்பட்டுள்ளது.
- எம்.எம். பாஸில் என்பவரினால் எழுதப்பட்ட "இலங்கை முஸ்லிம்களின் உயர் கல்வி வளர்ச்சியில் தென்கிழக்கு பல்கலைக்கழகம்: கலாநிதி எம்.எச்.எம். அஷ்ரப் குறித்து மறுவாசிப்பு" எனும் கட்டுரையில் கலாநிதி எம்.எச்.எம் அஷ்ரப், தென்கிழக்குப் பல்கலைக்கழக உருவாக்கப் பின்னனி மற்றும் புதிய பல்கலைக்கழக உருவாக்கத்துக்கான அரசியல் தலைமைத்துவம் போன்ற தலைப்புக்கள் தொடர்பாக விளக்கியுள்ளார். இதிலிருந்து ஆய்வுக்கான தகவல்கள் பெறப்பட்டன.


ISBN 978-624-5736-14-0

- ❖ வை.எம் பைறூஸ் (2020) "இலங்கை முஸ்லிம்களின் உரிமைக் கலாச்சாரம் கேள்விக்குற்படுத்தப்படுகின்றதா….!!"என்ற கட்டுரையில் இலங்கை சிறுபான்மை சமூகத்தின் உரிமைகள் மற்றும் மர்ஹூம் அஷ்ரபின் சிறுபான்மை சமூகத்திற்கான செயற்பாடுகள் போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆய்வுக்காக இக்கட்டுரை பயன்படுத்தப்ட்டுள்ளது.
- ❖ பௌவுஸ்தீன் பமீஸ் (2019) "ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவரின் தலைமைத்துவப் பண்புகள்: ஓர் அரசியல் ஆய்வு" என்ற ஆய்வுக் கட்டுரை மர்ஹூம் அஷ்ரபின் அரசியல் செயற்பாடுகளை துள்ளியமாக குறிபிட்டுள்ளது. ஆய்வின் தேவைக்கேற்ப பயன்படுத்தப்பட்டுள்ளது.
- ❖ எம்.எம் பாயிஸ், எம்.ஏ.எம் பௌசர் (2019) ஆகியவர்களினால் எழுதப்பட்ட "ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்: சமகாலத் தொய்வுகளும் அவசியமான சீர்த்திருத்தங்களும்"எனும் ஆய்வுக் கட்டுரையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தோற்றம், வளர்ச்சி மற்றும் அதன் தற்கால நிலை பற்றி ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிலிருந்து ஆய்வுக்காக தகவல்கள் பெறப்பட்டன.

**கலாநிதி அஷ்ரபின் கல்விக்கு ஆற்றிய பங்களிப்பு.**

முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்கு பங்காற்றிய தலைவர்களில் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களுக்கு பிரதான இடமுண்டு. பல் துறைகளில் சிறந்து விளங்கிய அவர் முஸ்லிம்களின் கல்வி தொடர்பாக கூடுதல் அக்கறை எடுத்ததுடன் முஸ்லிம்களின் உயர் கல்வியில் புரட்சிகரமான மாற்றத்தினை ஏற்படுத்தினார். அவரது அயராத முயற்சியினால் இலங்கையில் தேசிய பல்கலைக்கழகங்களுல் ஒன்றான தென்கிழக்கு பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.

இப்பல்கலைகழகத்தின் ஆரம்ப கால கல்வி நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்காக அரசியல் தலைமைத்துவத்தினை தொடர்ந்து வழங்கி வந்தார். யுத்த சூழ்நிலை காரணமாக முஸ்லிம் மாணவர்களின் கல்வி நடவடிக்கை ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் காணப்பட்ட சந்தர்ப்பத்தில் மர்ஹூம் அஷ்ரபின் அயராத உழைப்பினால் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் உருவாக்க ஆரம்பிக்கப்பட்டது. இந்நிலையினை கருத்திற் கொண்டு புதிய பல்கலைக்கழக உருவாக்கத்திற்கான அரசியல் தலைமைத்துவத்தினை வழங்குவதற்கு முற்பட்டார்.

இந்நிலையில் முஸ்லிம் மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களுக்கு முடிவினை பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் அஷ்ரப் தன்னை இனைத்துக் கொண்டதுடன், தனக்கிருந்த அரசியல் பலத்தினை பயன்படுத்தி புதிய பல்கலைக்கழகம் ஒன்றினை அம்பாறையில் அமைப்பதற்கான அனுமதியினையும் பெற்றுக் கொண்டார். இப்புதிய பல்கலைக்கழக உருவாக்க சிந்தனை மர்ஹூம் அஷ்ரப் அவர்களுக்கு சூழ்நிலைப்பட்டதாத அன்றி அவரது தூரநோக்குள்ள சமூக அரசியல் பார்வையில் என்றும் நீங்காத இடத்தினை பெற்றிருந்தது. குறிப்பாக பல்லின மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெறுவது என்பது தமது இன விகிதாசாரத்தை விடக் குறைவாக இருந்ததுடன் ஏனைய மாணவர்களுடன் ஒப்பிடும் போது மிகக் குறைவானதாக விளங்கியது. இந்நிலையினை போக்கி முஸ்லிம்களை கல்வி ரீதியாக

மேம்படுத்த வேண்டும் என்பது அஷ்ரப் அவர்கள் உறுதியான நிலைப்பாட்டினை கொண்டிருந்தார்கள்.**(எம்.எம் பாஸில்,2013)**

இதன்படி அஷ்ரப் அவர்கள் அரசியல் தலைமைத்துவத்துடன் 1995 ஒக்டோபர் 23ஆம் திகதி தென்கிழக்கு பல்கலைக்கழக கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் 33 இடம்பெயர்ந்த மாணவர்களுடன் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கல்லூரி கட்டிடத்தில் தமது கல்வி நடவடிக்கைகளை ஆரம்பித்த இக்கல்லூரி கட்டிடத்தில் கலை மற்றும் வர்த்தக முகாாமைத்துவ பீடங்களை உள்ளடக்கியிருந்தது.**(எம்.எம் பாஸில்,2013)** பின்னர் தேசிய பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்பட்ட இப்பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக அரசறிவியல் துறை பேராசிரியர் எம்.எல்.ஏ.காதர் கடமையாற்றியமையும் குறிப்பிடத்தக்கது. அட்டாளைச்சேனையில் இயங்கி வந்த இப்பல்கலைக்கழகமானது 1998 ஆம் ஆண்டு ஒலுவில் வளாகத்திற்கு இடமாற்றப்பட்டது.

இலங்கையின் உயர்கல்வி வளர்ச்சியில் உன்னதமான இடத்தினை பெற்றிருக்கும் இப்பல்கலைக்கழகமானது தற்போது கலை கலாச்சார பீடம், முகாமைத்துவ வர்த்தக பீடம், பிரயோக விஞ்ஞான பீடம், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடம், பொறியியல் பீடம், தொழிநுட்பப் பீடம் ஆகிய பீடங்களை கொண்டுள்ளது. நாட்டின் அனைத்து பாகங்களில் இருந்து வருகைதரும் மாணவர்கள் இப்பல்கலைக்கழகத்தில் தமது கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்து வருவதுடன் அன்மைக் காலத்தில் சர்வதேச மாணவர்களும் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர். அதே வேளை பல்தன்மையினை பிரதிபலிக்கும் கல்விசார் ஊழியர் தொகுதி மற்றும் நிர்வாக ஊழியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், தற்காலிக ஊழியர்கள் என இப்பல்கலைக்கழக சமூகம் விரிவாக்கம் பெற்றுள்ளது.

மர்ஹூம் அஷ்ரபின் பல்கலைக்கழக உருவாக்க கனவு தனது சமூகத்தின் நலவுடன் பெருமளவு பின்னிப் பினைந்திருந்த போதிலும் பல்கலைக்கழகம் ஒன்றின் உருவாக்கம் இனத்துவ ரீதியிலானதாக இருந்து விடக் கூடாது என்பதில் அவர் மிக கவனமாக செயற்பட்டிருக்கின்றார். அதன் காரணமாக அஷ்ரப் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தினை ஒரு தேசிய பல்கலைக்கழகமாக உருவாக்கினார். அவர் அரசியலில் உச்ச நிலை அடைந்திருந்த போது தென்கிழக்கு பல்கலைக்கழகம் முஸ்லிம் மாணவர்களுடன் தமிழ் மாணவர்களையும் இனைத்து கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்ததனை குறிப்பிட வேண்டும். தற்போதைய சூழலில் பெரும்பான்மை சிங்கள மாணவர்களும் உள்ளீர்க்கப்பட்டு தேசிய பல்கலைக்கழகம் ஒன்றில் அனைத்து குணாம்சங்களும் பொருந்தியதாக தென்கிழக்கு பல்கலைக்கழகம் மாற்றமுற்றுள்ளது. இது அஷ்ரபின் கனவாகவும் இருந்தது.

நாட்டினதும் பிராந்தியத்தினதும் தேவையினை கருத்திற் கொண்டு B.A , BBA , B.COM , B.SC , MIT , ENG போன்ற இளமாணிப் பட்டங்களை வழங்கி வருவதுடன் முதுமாணி, முதுத்தத்துவமாணி, சான்றிதல் டிப்ளோமா என பல பட்டங்களும் இப்பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்றது. மேலும் நவீன கலைத்திட்ட மறுசீரமைப்புக்கினங்க இஸ்லாமிய வங்கியற் துறை, இஸ்லாமிய சட்டம், தகவல் தொழிநுட்பம், பொது கொள்கை, சுற்றுலா துறை, நில அளவை போன்ற புதிய கற்கைகளை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளையும் இப்பல்கலைக்கழகம் முன்னெடுத்துள்ளது.

இப்பல்கலைக்கழகம் சுமார் 3400 உள்வாரி மாணவர்களையும் 7500 மேற்பட்ட வெளிவாரி மாணவர்களையும் இனைத்து கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்து வருகின்றது. அன்மைக்காலத்திலிருந்து பட்டப் பின் படிப்புத்துறையில் ஆர்வம் காட்டி வரும் இப்பல்கலைக்கழகமானது ஏறத்தாழ 260 ற்கு மேற்பட்ட பட்டப்பின் படிப்பு மாணவர்களையும் உள்ளடக்கியுள்ளது.

உயர்கல்வித்துறையில் புதிய திருப்பத்தினை கொண்டிருக்கும் இப்பல்கலைக்கழகம் அதன் ஸ்தாபகர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களை நினைவு கூறும் வகையில் அஷ்ரப் ஞாபகார்த்த நூலகம் ஒன்றினையும் தாபித்துள்ளது. மிக பிரமான்டமான வகையில் அமையப் பெற்றுள்ள இப்பல்கலைக்கழக நூலகம் ஏறத்தாழ 120,000 புத்தகங்களுடன் 275 சஞ்சிகைகளையும் 1200 ஏடுகளையும் உள்ளடக்கியதாக பிராந்தியத்தினதும் தேசத்தினதும் வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றி வருகின்றது. பெருந்தொகையான மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு உதவத்தக்க வகையில் அமையப் பெற்றுள்ள இந்நூலகம் 400 ஆசன இருக்கைகளுடன் மாற்றுத்திறனாளிகள் சுயாதீனமான செயற்பாடுகளுக்கு இடமளிக்கத்தக்கதான வசதிகளையும் கொண்டு விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

அஷ்ரபினால் கட்டமைக்கப்பட்ட இப்பல்கலைக்கழகம் அதனது உட்கட்டமைப்பில் என்றுமில்லாதவாறு பாரிய வளர்ச்சிகண்டுள்ளது. நூலகம், முகாமைத்துவ வர்த்தக பீடக் கட்டிடம், காபட் வீதிகள், மாணவர் பல்கலைக்கழக உட்கட்டுமான விருத்தி தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வரலாற்றில் என்றும் நினைவு கூறத்தக்கதாகும்.

மாணவர்களது ஆற்றல்களை வெளிக் கொண்டு வருவதிலும் இப்பல்கலைக்கழகம் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கியுள்ளதுடன் பல்லின மத கலாச்சார பாரம்பரியங்களை கொண்ட உள்நாட்டு வெளிநாட்டு மாணவர்களை ஒன்றினைத்து இன நல்லுறவினை ஏற்படுத்துவதிலும் இப்பல்கலைக்கழகம் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது.

ஆய்வு ரீதியாக புதிய வளர்ச்சி நிலைகளை எட்டுவதற்கு இப்பல்கலைக்கழகம் ஆரம்பம் முதல் இன்று வரை முயற்சி செய்து வருகின்றது. அதற்கமைய பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மாணவர்களது ஆய்வு நடவடிக்கைகள் வரவேற்கப்படுவதுடன் பல்கலைக்கழக மட்டத்தில் ஆய்வுக் கலாச்சாரம் ஒன்றினை உருவாக்குவதற்காக பல தரப்பட்ட ஆய்வரங்குகளையும் நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மர்ஹூம் அஷ்ரப் அவர்கள் அரசியல் அதிகாரத்தின் ஊடாக முஸ்லிம்களுக்கும் இந்நாட்டில் வாழ்கின்ற பல்லின மாணவர்களுக்கும் கல்வி வளர்ச்சிக்கு முஸ்லிம் தலைவர் என்ற வகையில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தினை நிர்மானித்து மாணவர்களின் கல்வி மற்றும் ஆளுமை விருத்திற்கு பங்காற்றிய உத்தம தலைவராக சிறந்து விளங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

கலாநிதி மர்ஹூம் அஷ்ரப் இடம்பெயர்ந்த மக்களின் சமூக, பொருளாதார, கல்வி மேம்பாட்டுக்காகப் பல சமூக நலனோம்புதல் திட்டங்களையும் இவர் முன்னெடுத்தார், அவற்றில் மீள்குடியேற்றத் திட்டங்களும் அடங்கும். குறிப்பாக புத்தளத்தில் தங்கியிருந்த இடம்பெயர்ந்த மாணவர்களின் கல்வி நலன் கருதி ஐந்து மாத காலப் பகுதிக்குள் 29

பாடசாலைக் கட்டடங்களை நிர்மாணித்து அவற்றை ஒரே நாளில் திறந்து வைத்தார். ( **மர்லின் மரிக்கார்,2015)**

ஈழத்து இலக்கிய வரலாற்றில் அஷ்ரப் குறிப்பிடத்தக்க ஒருவர். 1962.09.16 இல் ''தேசிய முரசு'' என்ற பத்திரிகையில் அவர் ''தாய்'' என்ற கவிதையை எழுதினார். அந்தக் கவிதை வெளிவந்த பின்னர் 1990கள் வரை தினபதி, தினகரன், தேசிய முரசு, செய்தி, விவேகி, ராதா, தாய்நாடு, புதுப்பாதை, அல் இஸ்லாஹ், சுதந்திரன், தமிழ் முரசு, மித்திரன், சிந்தாமணி, மாணவன் முதலான பத்திரிகைகளில் அவ்வப்போது எழுதி வந்துள்ளார். இவை எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து நூலாக வெளியிட வேண்டும் என்ற ஆர்வத்தினை எம்.ஏ. நு.ஃமான், அன்பு முகைடீன் முதலானவர்கள் பல தடவை கிளரியிருக்கிறார். ஆனால் அது அஷ்ரப் அரசியலில் உச்சத்திலிருக்கும்போதே சாத்தியமானது. அதனால் அவரிடமிருறந்த நல்ல கவிதைகளின் பக்கம் அரசியல் சாயமிக்கதாக மாறிவிட்டது. ( **றமீஸ்,2019)**

சுமார் முப்பதாண்டுகளுக்கு மேல் அஷ்ரப் எழுதிய 179 கவிதைகள் அவரது ''நான் எனும் நீ'' எனும் தோப்பில் உள்ளது. இது ஈழத்தில் வெளிவந்த தனிநபர்களின் கவிதைத் தொகுதிகளில் மிகப் பெரியது. அரசியலை மட்டுமன்றி, சமூகத்தின் பல்பரிமாண இயக்கத்தினை கவிதைகளினூடாக வெளிக் கொண்டுவரும் இத்தொகுதி, ஈழத்து கவிதை இலக்கிய வரலாற்றில் மிக முக்கியமானது. அஷ்ரபின் விரிந்த உலோகாயுத, அரசியல், சமய சிந்தனைகளைப் புரிந்துகொள்வதற்கு இக்கவிதைத் தொகுதி நன்கு பயன்படுகிறது. அதேநேரம் இலங்கையின் அரசியல், சமூக, இலக்கியப் போக்குகளில் ஏற்பட்ட மாற்றங்களையும் அவரது கவிதைகள் பிரதிபலிக்கின்றன.

அஷ்ரபின் கவிதைகளை விட அஷ்ரபை அதிகம் ஞாபகப்படுத்துவதும் நிலைத்திருக்கச் செய்வதும் அவரது இசைப் பாடல்களே. ''ஆயிரம் விளக்குடன் ஆதவன் எழுந்து வந்தான்'' என்ற பாடல் இன்றும் முஸ்லிம் காங்கிரசின் பிரச்சாரப் பாடலாக எல்லோர் மனதிலும் நிலைத்திருக்கிறது. அவ்வகையில் முஸ்லிம் பெண்களைக அரசியல்மயப்படுத்துவதிலும் அவர் மிகுந்த கவனம் செலுத்தினார். ( **றமீஸ்,2019)**

''எந்த சமுதாய இளைஞர்களின் இதயங்கள் இரும்பு போன்று இருக்கின்றனவோ, அந்த சமுதாயத்திற்கு வாள்கள் தேவையில்லை'' என்ற அல்லாமா முஹம்மது இக்பாலின் கூற்றினை நோக்கி முஸ்லிம் சமூகத்தின் இளைஞர்களை வழிநடாத்துவதாக அவரது கட்டுரைகள் அமைந்திருந்தன. பிற்காலத்தில் அஷ்ரப் ஓர் அரசியல்வாதியாக உருப்பெருவதற்கு இந்த எழுத்துக்கள் அணிசேர்ப்பனவாக அமைந்தன. மணிக் கணக்கிலேயே அவர் மக்கள் மத்தியில் பேசுவதற்கும் பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கும் இந்த எழுத்துக்கள் அவருக்கு களம் அமைத்துக்கொடுத்தன. அஷ்ரப் என்ற எழுத்தாலனால்தான் - அஷ்ரப் என்ற இலக்கியல்வாதியினால்தான் ஆளுமைமிக்க அரசியல்வாதியாக தொழிற்பட முடிந்தது. ( **றமீஸ்,2019)**

**அரசியல் பங்களிப்பு**

கலாநிதி M.H.M அஷ்ரப் இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் மிகப்பெரும் ஆளுமையாவார். 1981-09-21 இல் முஸ்லிம் காங்கிரஸ் ஒரு அரசியல் இயக்கமாக காத்தான்குடியிலேயே அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. மர்ஹூம் அஹ்மத் லெப்பையே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் ஸ்தாபகர் ஆவார். அதன் தலைமை பதவியை மர்ஹூம் கலாநிதி அஷ்ரபிற்கு வழங்கப்பட்டது. பின்னர் அது கல்முனையை தலைமையகமாகக் கொண்டு செயல்பட ஆரம்பித்தது. 1985 இல் கிழக்கு மாகாணத்தில் நடந்த தமிழ் - முஸ்லிம் கலவரங்கள் முஸ்லிம் காங்கிரசின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் உந்துகோலை வழங்கியுள்ளது. 1986 இல் அது அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டது. **(றவுப் ஸெய்ன்(2016) சமகால இலங்கை முஸ்லிம்கள்,இலங்கை பக்.158)**

மறைந்த மாபெரும் தலைவர் மர்ஹூம் கலாநிதி M.H. M அஷ்ரப் அவர்கள் முஸ்லிம் சமூகம் அரசியலிலே விழித்தெழ வேண்டும் என்பதற்காக தனது தனிப்பட்ட சகல விடயங்களையும் மறந்து விட்டுவிட்டு முஸ்லிம் சமூகத்தின் எழுச்சிக்காக இரவு பகல் பாராது அலசியல் களத்தில் பாடுபட்ட ஒருவர் என்றால் மிகையாகாது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் இயக்கத்தை ஆரம்பித்து முஸ்விம்களுக்கு அரசியல் அடையாளத்தைப் பெற்றுக் கொடுத்தவர் அவரே. கட்சியின் தலைவராக, அமைச்சராக,ஜனாதிபதி சட்டத்தரணியாக இருந்து பல்வேறு பணிகளை மேற்கொண்ட அவர் பெரும்பான்மை, சிறுபான்மை என்ற வேறுபாடுகளுக்கு அப்பால் சென்று சேவை செய்த சிறந்த சமூக சேவகன்.

முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளும் இருப்பிடமும் முக்கியமே தவிர தன்னுடைய சொத்து, நலன்கள் அல்ல எனத்தலைவர் அஷ்ரப் அவர்கள் அடிக்கடி கூறுவார்கள்.**(நூறுல் ஹுதா உமர்,2020)** சமூகப்பிரச்சினைகள் வரும்போது கூட தன்னுடைய அமைச்சுப்பதவிகளை தூக்கியெறிந்து ஆட்சியாளர்களுக்கு சவால் விட்டு முஸ்லிம் சமூகத்திற்கு பல சேவைகளை பெற்றுக்கொடுத்தவரும் அவரே.

குறிப்பாக பெரும்பான்மைக்கட்சிகளில் முஸ்லிம் தலைமைகள் அதிகாரத்தில் இருந்த போதிலும் முஸ்லிம்கள் அநாதைகள் ஆக்கப்பட்டு அவர்களது பிரச்சினைகள் குறித்து எவருமே பேசாத சூழலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற மாபெரும் அரசியல் இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார்.

கட்சி ஆரம்பிக்கப்பட்டு முதலாவதாக எதிர்கொண்ட 1987 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் களத்தில் குதித்தது. அப்போது தலைவர் அஷ்ரப் அவர்களுடன் நெருக்கமான உறவைக்கொண்டிருந்த எம்.எல்.எம்.ஏ ஹிஸ்புல்லாஹ்விடம் மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் நடவடிக்கைகளுக்கான பொறுப்பை அவர் ஒப்படைத்தார்.தலைவர் அஷ்ரப் அம்பாறை மாவட்டத்திற்கு பொறுப்பாக இருந்தார்.

அவர் எப்போதுமே முஸ்லிம் சமூகத்தினுடைய அரசியல் உரிமைகள் தொடர்பிலும் அவற்றை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது தொடர்பிலுமே அதிக கவனம் செலுத்தினார். ஆட்சி

அதிகாரத்திலுள்ளவர்களுடன் முஸ்லிம் சமூகம் கைகோர்த்திருப்பதன் ஊடாகவே முஸ்லிம் சமூகத்தின் அரசியல் அபிலாசைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற உறுதியான கொள்கையுடன் செயற்பட்டார். அதனை அவர் பல சந்தர்ப்பங்களில் சாதித்தும் காட்டியிருந்தார்.

நாட்டின் சிறுபான்மையாக உள்ள முஸ்லிம்கள் அரசுக்கு எதிர்ப்புச்சக்தியாக இருப்பார்களாயின் எமது சமூகத்தின் பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வை பெற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் அழுத்தமாக, திருத்தமாக அவர் சுட்டிக்காட்டியிருந்தார். கடந்த கால அரசியல் போக்கை வைத்து நிகழ்கால அரசியலுக்கான திட்டங்களை வகுப்பதில் அவரைப்போன்ற சிறந்த முஸ்லிம் தலைவர் எவருமே இருக்கமுடியாது.

அரசை பகைத்துக்கொண்டு தமது அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியாது என தலைவர் அஷ்ரப் கூறிய விடயம் சிறுபான்மைக்கட்சிகளுக்கு தற்போதுதான் புரிய ஆரம்பித்துள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்ட போது இணைந்த வடக்கு கிழக்கு முஸ்லிம்களுடைய எதிர்காலத்தை இல்லாமல் செய்துவிடும் என்பதற்காக வடக்கு கிழக்கு பிரிக்கப்பட வேண்டும் அல்லது கிழக்கில் முஸ்லிம்களுக்கு என தனி மாகாணசபை உருவாக்கப்பட வேண்டும், என்ற நிலைப்பாட்டில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மர்ஹும் அஷ்ரப் அவர்கள் இருந்தார்கள். 1988ஆம் ஆண்டு மாகாணசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் கோசமாக இதுவே முக்கிய அம்சமாக அமைந்தது.

2012ஆம் ஆண்டு நடைபெறவிருந்த பொதுத் தேர்தலுக்கு 2000ஆம் ஆண்டிலே திட்மிட்டவர் அஷ்ரப் அவர்கள். நாடாளுமன்றத்தில் 25 உறுப்பினர்களைப் பெற்றுக் கொண்டு நாடாளுமன்றத்தில் மூன்றாவது சக்தியாக வளர்ச்சி கண்டு அதனூடாக அரசில் பேரம் பேசும் சக்தியாக முஸ்லிம்களின் அரசியல் பயணத்தை மாற்ற வேண்டும் என்ற நோக்குடனேயே தேசிய ஐக்கிய முன்னணி ஆரம்பிக்கப்பட்டது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய ஐக்கிய முன்னணி ஊடாக அரசியல் பயணத்தை முன்னெடுத்து 2012ஆம் ஆண்டு தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது, எங்கெங்கு ஆசனங்களை வெல்வது என்பவை தொடர்பில் இரவு பகலாக தலைவர் அஷ்ரப் அவர்கள் திட்டமிட்டார்கள்.

முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியில் அரசியல் பயணத்தில் ஏற்பட்ட பின்னடைவு காரணமாக தனது அரசியலை அஷ்ரப் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் 1980 இல் இணைத்துக் கொண்டார். அதன் பின்னர், 1980, 1981 காலப்பகுதியில் காத்தான்குடியில் அஹமட் லெப்பை தலைமையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற பேரியக்கம் தோற்றுவிக்கப்பட்டு, அதனோடு அஷ்ரப் போன்றவர்களும் இணைந்து செயற்பட்டார்கள்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 1987 இல் ஏற்படுத்தப்பட்ட இந்தியா-இலங்கை ஒப்பந்தத்தினூடாக கொண்டு வரப்பட்ட மாகாண சபை முறைமையில் 1988 இல் நடைபெற்ற மாகாண சபைத்தேர்தலில் வடகிழக்கிற்கு வெளியில் முதன்முதலாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட்டு, 12 ஆசனங்களைக் கைப்பற்றிப் கொண்டது.


ISBN 978-624-5736-14-0

அத்தோடு, இணைந்த வடகிழக்கு மாகாண சபைத்தேர்தலிலும் பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் போட்டியிட்டு, 17 ஆசனங்களைக் கைப்பற்றி, வடகிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைமையையும் முஸ்லிம் காங்கிரஸ் பெற்றுக் கொண்டது.

1988 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ரணசிங்க பிரேமதாசா அவர்களுடனான பேச்சுவார்த்தையின் போது, பாராளுமன்றத் தேர்தல் வெட்டுப்புள்ளி 12.5மு வீதமாக இருந்ததை 5மு வீதமாக குறைத்து சிறுபான்மை, சிறிய கட்சிகளும் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெறுவதற்கு வழியமைத்தார். 1988ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு முதன்முதலாக பாராளுமன்றம் பிரவேசித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினை பொருத்தவரையில் 1994 இல் இடம்பெற்ற பாரளுமன்ற பொதுத்தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் ஆகிய இரண்டும் முக்கியமானவையாகும். இவ்விரு தேர்தலிலும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னனியினை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரித்தது. 1994 இல் இடம்பெற்ற பாரளுமன்றப் பொதுத்தேர்தலில் காங்கிரஸ் 7 ஆசனங்களைக் கைப்பற்றியதுடன் பொதுஜன ஐக்கிய முன்னனி அரசாங்கத்தினை அமைப்பதற்கு ஆதரவு நல்கியது. இதன் போது அமைக்கப்பட்ட அரசாங்கத்தில் அஷ்ரப் கப்பல் துறை, புனர்வாழ்வு, புளரமைப்பு ஆகிய முக்கிய அமைச்சுப் பொருப்புக்களைப் பெற்றுக் கொண்டார். அவரது கட்சியை சேர்ந்தவர்களுக்கு பிரதி அமைச்சுப் பொருப்புக்களும் வழங்கப்பட்டன. அதே ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலிலுத் சந்திரிக்காவினை ஆதரித்து அஷ்ரப் பிரச்சாரம் செய்தார். இறுதியில் கனிசமான வாக்குகளைப் பெற்று சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். **(எம்.எம் பாயிஸ்/எம்.ஏ.எம் பௌசர்,2019)**

தனது அரசியல் பயணத்தில் முஸ்லிம் சமூகம் இந்த நாட்டில் முக்கிய அரசியல் பதவிகளைப் பெறும் நிலையை தனது சாணாக்கியத்தால் உருவாக்கவும், அன்றைய இனவாத சிந்தனைகள் முஸ்லிம் சமூகத்தை நோக்கி திருப்பப்படுவதில் அதன் எதிர்க்கால ஆபத்துக்களை உணர்ந்து அதற்கு தீர்வாகவும் எல்லா சமூகத்தவர்களையும இணைத்துக்கொண்டு தனது அரசியலை முன்னெடுக்க 1999 இல் புதிய பாதையை 2012 ஐ நோக்கியதாக அமைத்துக்கொண்டார்.

இரண்டாம் சிறுபான்மையினராகவும் சுதந்திரத்துக்குப் பின் பல தசாப்தங்களாக அரசியல் அநாதைகளாக நலிவுற்றிருந்த முஸ்லிம்களுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாகத் தலைவரே முகவரி பெற்றுக் கொடுத்தார். தனது தலைமைத்துவத்தின் கீழ் மேல் மாகாணத்தில் 6 ஆசனங்களையும் தொடர்ந்து வடக்கு கிழக்கு 17 ஆசணங்களுடன் எதிர்க்கட்சியாகத் திகழ்ந்ததுடன் 1989 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலில் கட்சி சார்பாக 4 ஆசனங்களைப் பெற்றார். இலங்கை வரலாற்றில் தனி ஒரு முஸ்லிம் கட்சியாக முதன் முதலில் போட்டியிட்டு 4 ஆசனங்களைப் பெற்றார். அதிலும் அவர் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் 56464 வாக்குகளைப் பெற்று அமோக வெற்றியிட்டினார். தொடர்ந்து வந்த ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் கிடைத்த கனிசமான வெற்றிகளுடன் 1994 இல் முஸ்லிம் காங்கிரஸ் தேசிய அரசினை தலைமையினை தீர்மானிக்கும் பங்கினை ஆற்றியதுடன் அரசாங்கத்தினை தீர்மானிக்கும் மூன்றாம்

சக்தியாகவும் திகழ்ந்தார்கள். ஆரசாங்கத்தில் செல்வாக்கு செலுத்தும் முக்கிய பல அமைச்சுக்களையும் அவர் வகித்தமையும் நோக்கத்தக்கது. முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் 2000 ஆம் ஆண்டு அவரது திடீர் மறைவின் வரைக்கும் வெருமனே ஓர் அரசியல் தலைவர் என்பதை விடுத்து முஸ்லிமகளின் பாரம்பரிய அரசியல் கலாச்சாரத்தை மாற்றியமைக்கவும் இலங்கை முஸ்லிம் சமூகத்தின் சமூக பொருளாதார அரசியல் அபிவிருத்தியை தரமுயர்த்தவும் கனிசமான அளவில் உழைத்தார். **(பௌவுஸ்தீன் பமீஸ், 2019)**

இதனூடாக பல நகர்வுகளை மேற்கொள்வதற்கு தன்னை தயார்ப்படுத்திக் கொண்டிருந்த தலைவர் அஷ்ரப், 2000 ஆம் ஆண்டு செப்டொம்பர் மாதம் 16 ஆம் நாள் ஹெலிகெப்டர் விபத்தினூடாக மரணித்தார்.

**பொருளாதார சேவை**

அஷ்ரப் ஆளுமையின் அரசியல், கல்விப் பங்களிப்புக்களைப் போன்றே பொருளாதாரப் பங்களிப்புக்களும் பாராட்டிப் பேசப்பட வேண்டிய ஒன்றாகும்.

1989ம் ஆண்டு பாராளுமன்றத்தில் பிரவேசித்த அஷ்ரப் ஆளுமை 1994ம் ஆண்டிலிருந்து துறைமுகங்கள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சராக செயற்பட்டார். இக்காலப் பகுதியில் பொருளாதார அபிவிருத்திக்காக பல துறைமுகங்களை அமைத்து வியாபார மார்க்கங்களை விரிவுபடுத்த முன்னின்று உழைத்தார். அந்தவகையில் ஒலுவில் துறைமுகம், கல்முனை மீன்பிடித் துறைமுகம், காலி துறைமுக அபிவிருத்தி, குயின் எலிசபெத் இறங்குதுறை அபிவிருத்தி போன்ற திட்டங்களை செயற்படுத்தினார். இத் திட்டங்களினூடாக மீன்பிடி மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான திட்டங்களை வகுத்தார். தனக்குக் கிடைத்த அரசியல் அந்தஸ்த்தை தனக்கு சாதகமாக பயன்படுத்தாது பொதுமக்கள் நலனுக்காக பயன்படுத்தியுள்ளதை அவரது வாழ்க்கை வரலாற்றை ஆய்வு செய்யும் போது அறிந்து கொள்ளலாம். அரசியலில் நற்சேவையாற்றிக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் வேலையற்றோர் பிரச்சினையை தீர்க்கும் வகையில் பல அரச தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்தார். இத் தொழில் வாய்ப்புக்களினால் இலங்கைத் திரு நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தி அடைந்ததுடன் தொழிலற்றோர் பிரச்சினைக்கு ஓரளவு முடிவும் கிடைத்தது. தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு நாட்டிற்காக உழைக்கும் வர்க்கத்தினர் உருவாக்கப்பட்டதனால் பல மில்லியன் கணக்கான ரூபாய்கள் வருமானமாகக் கிடைக்கும் நிலை உருவாகியது.

எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்கள் தனக்குக் கிடைத்த அரசியல் பலத்தை பயன்படுத்தி சமூகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதற்காக முழு மூச்சுடன் பாடுபட்டார். இலங்கை முஸ்லிம் வரலாற்றில் கலாநிதி பதியுத்தீன் ம.்.மூத் அவர்களைத் தொடர்ந்து தொழிலற்றோருக்கு தொழில் வழங்கும் செயற்றிட்டத்தை முன்நின்று நடத்திச் சென்ற உன்னத ஆளுமையாக எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் கருதப்படுகின்றார். இலங்கையின் மொத்த சனத்தொகையில் 8%ஆகக் காணப்படும் முஸ்லீம்கள் தொழில் வழங்கும்போது 1% தொழில் வாய்ப்புக்களைக்கூட பெறவில்லை என்பதை உணர்ந்த அஷ்ரப் அவர்கள்

அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க அவர்களின் அனுமதியுடன் 4000 முஸ்லிம்களுக்கு தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்தார். அத்தோடு இன, மத பேதமின்றி அனைவரும் பயனடைய வேண்டும் என்ற நோக்கத்தில் ஏனைய இனத்தவர்களுக்கும் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்தார். ஒவ்வொரு மாகாணமாக அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு போருளாதாரத்தை கட்டியெழுப்புதல் என்ற அடிப்படையில் முதன் முதலில் கிழக்கு மாகாணத்தில் பல அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்தார்.

தனக்குக் கிடைத்த கப்பல் துறைமுக அபிவிருத்தி அமைச்சுப் பதவியினூடாக பொருளாதார அபிவிருத்திக்காக அரும்பாடுபட்டார். இன்றும் கூட இவர் அமைச்சராக சேவையாற்றிய காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஒலுவில் துறைமுகம், கல்முனை மீன்பிடித் துறைமுகம் போன்ற துறைமுகங்களில் பலர் தொழில் செய்து தமது அன்றாட அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதனை அவதானிக்கலாம். ஆளுமை மிக்க அஷ்ரப் அவர்களின் சேவையானது அவர் மரணித்த பின்பும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது என்பதற்கு இது தக்க சான்றாகும்.

அஷ்ரப் ஆளுமையை நினைவுகூறுகின்ற பல்கலைக்கழகமாக இலங்கைத் தென் கிழக்குப் பல்கலைக்கழகம் காணப்படுகின்றது. இப் பல்கலைக் கழகம் சமூகத்திற்கு கல்விச்சேவை ஆற்றிக்கொண்டிருக்கும் அதேவேளை பலருக்கு தொழில் வாய்ப்பையும் பெற்றுக்கொடுத்துள்ளது. இங்கு பல விரிவுரையாளர்கள், கல்வி அதிகாரிகள், அலுவலக உத்தியோகத்தர்கள் பணியாற்றுகின்றனர். இவர்கள் அனைவருக்கும் தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுப்பதற்கு அஷ்ரப் அவர்களின் பங்களிப்பு காணப்பட்டுள்ளது என்பதை மறுக்க முடியாது. அத்தோடு இங்கு கல்வி கற்று வெளியேறும் பட்டதாரிகள் வெவ்வேறு தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதுடன் பலருக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் உன்னத பணியிலும் ஈடுபடுகின்றனர். அத்தோடு பலர் வெளிநாடுகளில் பணியாற்றி நாட்டுக்கு அந்நியச் செலாவணியை பெற்றுத் தருவோராகவும் காணப்படுகின்றனர்.

அஷ்ரப் அவர்கள் ஆற்றிய கல்விப் பணி நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் பங்களிப்புச் செலுத்தியுள்ளதை எவராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

**முடிவுரை**

முஸ்லிம்கள் நாட்டிற்கு வழங்கியுள்ள பங்களிப்புக்கள் குறைவாக மதிப்பிடும் இக்காலத்தில் கலாநிதி மர்ஹூம் அஷ்ரபின் நாட்டிற்கான சேவையை முன்வைப்பதாக இவ் ஆய்வு அமைந்துள்ளது. மேற்படி ஆய்வு கலாநிதி மர்ஹூம் அஷ்ரப் ஆளுமை ஆற்றிய அரசியல், பொருளாதார, கல்வி ரீதியான பங்களிப்புகளை அலசி ஆராய்கின்றது. மர்ஹூம் அஷ்ரபின் நாட்டிற்கான சேவை தற்கால அரசியல் பிரமுகர்களுக்கு சிறந்த முன்மாதிரியாக அமைந்துள்ளமை இவ் ஆய்வின் மூலம் அறியமுடிகிறது.

பதின்நான்கு வருட அரசியல் தலைமைத்துவத்தில் மர்ஹூம் அஷ்ரப் சிறுபான்மை சமூகம் உட்பட இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் குறிப்பாக முஸ்லிம்களுக்கு ஓர் சிறந்த தலைவராக அரசியல்வாதியாக தன்னை அடையாளப்படுத்திவிட்டுச் சென்றுள்ளார். முஸ்லிம்


ISBN 978-624-5736-14-0

காங்கிரஸ் அஷ்ரபின் தலைமைத்துவத்தின் கீழ் முழு வீச்சுடன் செயற்பட்டது. அஷ்ரபின அரசியல் முதிர்ச்சியும் அவரது ஆளுமையும் துணிகரப் பண்பும் கம்பீரமான தோற்றமும் தேசிய அரசியல் அரங்கில் முஸ்லிம் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்தன. அஷ்ரபும் அவரது காங்கிரஸும் 1994 இல் அமைந்த அரசாங்கத்தில் முக்கிய பாத்திரத்தினை எடுத்தனர். இதன் மூலம் காங்கிரஸ் பெற்றுக் கொண்ட வரப்பிரசாதங்களை கொண்டு அஷ்ரப் முஸ்லிம் சமூகத்தினை எழுச்சி நிலைக்குக் கொண்டு சென்றார்.

இக் காலகட்டத்திலே மர்ஹூம் அஷ்ரப் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை உருவாக்கி முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டார். அதேபோல், துறைமுக புணர்நிர்மான பணிகளையும் கட்சிதமாக நிறைவேற்றி பொருளாதார ரீதியான பங்களிப்பையும் நிறைவேற்றினார்.

**உசாத்துணைகள்** :


- பௌவுஸ்தீன் பமீஸ். (2019). ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸின் ஸ்தாபக தலைவரின் தலைமைத்துவ பண்புகள்: ஓர் அரசியல் சமூகவியல் ஆய்வு.
- றவூப் ஸெய்ன் (நளீமி). (2016). சமகால இலங்கை முஸ்லிம்கள் (இரண்டாம் பதிப்பு). சமூக விஞ்ஞானங்களுக்கான இப்னு கல்தூன் ஆய்வகம், 188/12,கண்டி வீதி , திஹாரி.
- பாஸில்,எம்.எம். (23.10.2013). "இலங்கை முஸ்லிம்களின் உயர் கல்வி வளர்ச்சியில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்: கலாநிதி எம்.எச்.எம்.அஷ்ரப் குறித்து மறுவாசிப்பு. srilankamuslim.lk
- பாஸில்,எம்.எம்., எம்.ஏ.எம்.பௌசர். (05.05.2015). ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்தின் பொறுப்பும் கட்சி மறுசீரமைப்பும். https://fazilmm.blogspot.com/2015/05/responsibility-of-slmc-leadership-and.html?m=1
- நூருல் ஹுதா உமர். (15.09.2020). அஷ்ரப் எனும் மரம் சாய்ந்து இரு தசாப்தங்களாகிட்டு. www.newsview.lk>blog-post-340
- பௌசர்,எம். (18.09.2015). படுகொலை செய்யப்பட்ட மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப். www.jaffnamuslim.com>2015/09
- பைறூஸ்,வை.எம். (14.04.2020). இலங்கை முஸ்லிம்களின் உரிமை கலாச்சாரம் கேள்விக்குறுப்படுத்தப்படுகின்றதா… www.importmirror.com>2020/04
- மாபெரும் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களின் வாழ்வும் பணியும் ஒரு கண்ணோட்டம். (02.11.2015). https://m.facebook.com/m.h.m.ashraff.thelegendaryleader/posts/695841617213513
- பாஸில்,எம்.எம், பொளசர்,எம்.ஏ.எம் (12.01.2019). ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்: சமகாலத் தொய்வுகளும் அவசியமான சீர்த்திருத்தங்களும்.
- மர்லின் மரிக்கார், (16.09.2015). தனித்துவ அரசியலுக்கு வித்திட்ட முஸ்லிம் தலைவர் அஷ்ரப். www.thinakaran.lk
- றமீஸ்,எம்.ஏ.எம். (2019). எம்.எச்.எம். அஷ்ரபின் இலக்கியப் பணிகள்: ஓர் அறிமுக உசாவல்.



ISBN 978-624-5736-14-0